**திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திரு எம்.ஜி.குழந்தைவேல், எம்.ஏ.,**

**ந.க.எண்.ண்4/19589/2014** **நாள்: 9.12.2014**

பொருள் - உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச்சட்டம்-2006 திருநெல்வேலி மாவட்டம்- அம்பாசமுத்திரம் வட்டம்- விக்கிரமசிங்கபுரம்- பாம்பே ஸ்வீட்ஸ் & பேக்கரி உரிமையாளர் அம்ஜத்அலி என்பவர் மீது உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்-2006ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது- அபராதம் விதித்து ஆணையிடப்பட்டது- தொடர்பாக.

படிக்கப் பட்டவை - 1)விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரின் குற்றப் பத்திரிக்கை எண்.01/14, நாள்: 06.06.2014
2)பாளையங்கோட்டை, உணவு பகுப்பாய்வு அறிக்கை நாள்: 24.03.2014
3)குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் நாள்: 01.12.2014

--------------------

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் பகுதியில் 10.03.2014 அன்று விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலர் ஆய்வுப்பணி மேற்கொண்டபொழுது விக்கிரமசிங்கபுரம், 55/799.மெயின்ரோட்டில் உள்ள பாம்பே ஸ்வீட்ஸ் & பேக்கரி உரிமையாளர் அம்ஜத்அலி, த/பெ.அப்துல் ரஹ்மான் என்பவரிடமிருந்து பொதுமக்களுக்கு உணவு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த Candy Lake Butter Toffee (Sealed Plastic Boxes) உணவுப் பொருளை விலைக்கு வாங்கி பகுப்பாய்வு செய்ததில், தப்புக்குறியிடப்பட்டு இருந்ததாக பகுப்பாய்வு அறிக்கை வரப்பெற்றதன் அடிப்படையில் விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரால் குற்றப் பத்திரிக்கை (எண்.01/14, நாள்: 06.06.2014) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பாளையங்கோட்டை, உணவு பகுப்பாய்வு அறிக்கையின்படி மேற்படி குற்றம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்-2006ன் கீழ்கண்ட விதிகளை மீறியதாக உள்ளது.

1) Section 3(1)(zf), 23(1), 23 (2), 26(1), 26(2) (ii), 27(3) (c), 27(3) (d)

2) Regulation No.2.2.2.6 (ii) and 2.2.2.6(iii) of Food Safety and Standards (Packaging and Labelling) Regulation-2011.

மேற்படி குற்றவழக்கில், குற்றம்சாட்டப்பட்ட அம்ஜத்அலி என்பவர், திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள் முன்பாக 01.12.2014 தேதியன்று ஆஜராகி இவ்வழக்கில் வழக்கறிஞர் வைத்து வாதாட விரும்பவில்லையென்றும், இந்த வழக்கில் அரசு எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவதாகவும், தனது குற்றத்தை ஒப்புக்கொண்டும் வாக்குமூலம் அளித்துள்ளார். விசாரணையின்போது விக்கிரமசிங்கபுரம், உணவுப் பாதுகாப்பு அலுவலரும் உடனிருந்தார்.

இந்நேர்வு தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட நபரை விசாரணை செய்ததின் அடிப்படையிலும், குற்றம்சாட்டப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையிலும், வழக்கு ஆவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், தப்புக்குறியிடப்பட்ட Candy Lake Butter Toffee (Sealed Plastic Boxes) உணவுப் பொருளை பொது மக்களுக்கு விற்பனை செய்ததற்காக உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ச்சட்டம்-2006 பிரிவு 52ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட அம்ஜத்அலி என்பவருக்கு ரூ.50000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்), அபராதமாக விதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி அபராதத் தொகையை உடனடியாக Adjudicating Officer, Tirunelveli என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து, இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்திடவும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும்
கூடுதல் மாவட்ட நீதிபதி, திலி.

பெறுநர்
1) அ.அம்ஜத்அலி, த/பெ.அப்துல்ரஹ்மான், 55/799.மெயின்ரோடு, விக்கிரமசிங்கபுரம் - 627 425
2) உணவுப்பாதுகாப்பு அலுவலர், விக்கிரமசிங்கபுரம்
.. மேற்படி குற்றம் சாட்டப்பட்ட நபரை நேரில் தொடர்புகொண்டு அபராதத் தொகையை வங்கி வரைவோலையாக செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும்.

நகல்: நியமன அலுவலர், உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, மருத்துவக்கல்லூரி வளாகம், பாளையங்கோட்டை..

நகல்: ண4.பிரிவு இருப்புக் கோப்பிற்கு.